**Previous Examination date – 14.10.2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 650 of 2012**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : பிரதாப்** | **Father/Husband's Name : பெருமாள்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.06.2026.**

**A1 present. A3 died. A2, A4 absent. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அடிவாரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். திருமதி.சாந்தி அடிவாரம் காவல்நிலையத்தில் கடந்த 16.04.2012ம் தேதி 21.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது முகமது கனி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விசாரணை செய்து பழனி அடிவாரம் காவல்நிலைய கு.எண்.123/2012 பிரிவு 387 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் அச்சு முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் முகமது கனி, பாண்டி, செல்வராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் சந்தனகுமார், பாண்டியன், கோபிநாத், ராஜேஷ் ஆகியோர்களை 17.04.2012ம் தேதி 10.00 மணிக்கு பழனி அடிவாரம் Winch நிலையம் முன்பு கைது செய்து பின்னர் 1வது எதிரி சந்தனகுமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சர்புதீன், சேக்முகமது ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் மேற்படி எதிரியிடம் அத்தாட்சியில் பணம் ரூபாய் 300/- மற்றும் கத்தி, இருசக்கர வாகனம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **ஒப்புதல் வாக்குமூலத்தில்**

**அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் படிவம் 91 மூலம் 17.04.2012ம் தேதி கத்தி – 1, பணம் ரூபாய் 300/–, TN 67 H 0157 Yamaha Crux R ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் TN 59 Q 8440 TVS Suzuki இருசக்கர வாகனத்தை 17.04.2012ம் தேதி கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **கத்தி – 1, பணம் ரூபாய் 300/–, TN 67 H 0157 Yamaha Crux R ஆகியவை அடங்கிய படிவம் 91 அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. TN 59 Q 8440 TVS Suzuki இருசக்கர வாகனம் அடங்கிய படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி **TN 67 H 0157 Yamaha Crux R மற்றும் TN 59 Q 8440 TVS Suzuki ஆகிய இருசக்கர வாகனங்கள் அடங்கிய புகைப்படம்(எண்ணிக்கை – 3) மற்றும் CD அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவு 387 இ.த.சவின் கீழ் 21.04.2012ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் குற்றமற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.18 17:47:16 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**